**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், வலங்கைமான்.**

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25 ம் நாள் புதன்கிழமை

**அசல் வழக்கு எண். 08 /2025**

வாதி தரப்பு சாட்சியாக PW. 1 ன் வாக்குமூலம் 1969ம் ஆண்டின் 44வது சட்ட ஏற்பாடின் படி திரு. P. ஜேசுபாலன், எம்.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், வலங்கைமான் அவர்களால் ஆணையிடப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | குருமூர்த்தி | Father Name | : | வீரையன் |
| Village | : | மேல அமராவதி | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | ஓட்டுநர் |
| Religion | : | | Age | : | 38 |

**<u>முதல் விசாரணை -</u>**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். இவ்வழக்கின் விபரங்கள் எனக்கு தெரியும். எனது தரப்பு முதல் விசாரணையை எழுத்து பூர்வமான பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு, எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது தான். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு நிரூபண வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன். வாதியின் பெரியப்பா தங்கராஜின் ஆதார் அட்டையின் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **வா.த.சா.ஆ. 1 ஆகவும்**, வாதியின் பெரியப்பாவின் மனைவி ஞானாம்பாள் அவர்களின் வாக்காளர் அடையாள அட்டையின் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **வா.த.சா.ஆ. 2 ஆகவும்**, வாதியின் மனைவி அனிதா பெயரில் உள்ள குடும்ப அட்டையின் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **வா.த.சா.ஆ. 3 ஆகவும்**, கடந்த 03.06.2024ம் தேதியிட்ட ஞானாம்பாளின் இறப்பு சான்றிதழின் உண்மை நகல் **வா.த.சா.ஆ. 4 ஆகவும்**, கடந்த 11.09.2023ம் தேதியிட்ட தங்கராஜின் இறப்பு சான்றிதழின் உண்மை நகல் **வா.த.சா.ஆ. 5 ஆகவும்**,

கடந்த 24.06.2024 ம் தேதியிட்ட 1வது பிரதிவாதி வாதியின் வாரிசு சான்றிதழ் கோரி தாக்கல் செய்த மனுவினை நிராகரித்த படிவத்தின் கணினி நகல் **வா.த.சா.ஆ. 6 ஆகவும்**, வாதியின் ஆதார் அட்டையின் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **வா.த.சா.ஆ.7 ஆகவும்** குறியீடு செய்யப்படுகிறது. தங்கராஜ் வாதிக்கு எழுதி வைத்த பதிவு செய்யப்படாத உயில் ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். (வாதி தரப்பு ஆவணங்களை குறியீடு செய்யவும் மற்றும் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காகவும் வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN
Digitally signed by JESU BALAN
Date: 2026.02.25 18:17:17 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.